Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி -02 | 19-10-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 243

படைக்கருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்.
கணினி முறை வீடியோ மிக்சிங்.
பாடல் பதிவுகள்
அனைத்திற்கும்

Jaffna Road.
Kilinochchi.

யாழ் சாலை.
(கி-8628) கிளிநொச்சி.

# பெரும்பாலும் 26ஆம் திகதிக்குப் பின்னர்
# இடை.நி. நகல் புலிகளால் சமர்ப்பிக்கப்படும்

## பேச்சுக்களைத் தொடர்வதா? இல்லையா என்பது அரசின் முடிவைப் பொறுத்தது என்கிறார் கேணல் கருணா



**வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக நகல் திட்டம் பெரும்பாலும் இம்மாதம் 26 ஆம் திகதிக்குப்பின் நோர்வே அரசாங்கத்தின் ஊடாக சிறீலங்கா அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா தெரிவித்தார்.**

இடைக்கால நகல் தொடர்பாக ஆராய்வதற்காக வெளிநாடு சென்றிருந்த கேணல் கருணா கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்திலிருந்து நேரடியாக மட்டக்களப்பு இலுப்படிச்சேனை பொதுமைதானத்திற்கு விசேட உலங்கு வானூர்தியில் நேற்று முற்பகல் வந்திறங்கினார்.

கேணல் கருணாவை மட்டக்களப்பு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ், அரசியல் துறைப்பொறுப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறைப் பொறுப்பாளர் நேற்று வன்னி திரும்பினார்

(அலுவலக செய்தியாளர்)

இடைக்கால நிர்வாக திட்டவரைவின இறுதி வடிவம் தொடர்பாக ஆராய்வதற்கென அயர்லாந்து சென்ற தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அடங்கிய குழுவினர் கிளிநொச்சியை நேற்று வந்தடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 10.45 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்த இக்குழுவினரைத் தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தமிழீழ நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மகளிர் அரசியல்துறைப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதார நிர்வாகப் பணிகளை புலிகள் செவ்வனே செய்வார்கள்

### - ஐரோப்பிய ஆணைக்குழுப் பிரதிநிதிகளிடம் மட்டு. அரச அதிபர்

பொருளாதார நிர்வாகப் பணிகளில் விடுதலைப்புலிகள் போதிய அனுபவத்தைக் கொண்டுள்ளனர். அதனை அவர்கள் செவ்வனே செய்வார்கள் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கூறியுள்ளார். மட்டு விஜயம் செய்த ஐரோப்பிய ஆணைக்குழு பிரதிநிதிகளிடமே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஆணைக்குழுவின் இலங்கைக்கான தலைவர் வூட்டர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படையினரின் தாக்குதலைக் கண்டித்து களுவாஞ்சிக்குடியில் மக்கள் ஆர்ப்பாட்டம்

### ஹர்த்தாலும் அனுஷ்டிப்பு

களுவாஞ்சிக்குடியில் சிரேஷ்ட அதிரடிப் படையினர் பொதுமக்கள் மீதும் வர்த்தகர்கள் மீதும் நடத்திய தாக்குதலைக் கண்டித்து நேற்று அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை களுவாஞ்சிக்குடியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றிற்குச் சென்ற அதிரடிப்படையினர் கப்பமாக சீமெந்து பக்கெட்டுக்களை கேட்டுள்ளனர். ஏற்கனவே 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்களை விசேட அதிரடிப்படையினர் கப்பமாக பெற்றிருப்பதாகவும், மேலும் மேலும் இவ்வாறு பொருட்களைத் தரமுடியாதென கடையின் உரிமையாளர் மறுத்துள்ளார்.

இதனையடுத்து அக் கடையிலுள்ள மேனசயைக் காலால் உதைத்ததுடன் பொருட்களையும் படையினர் சேதமாக்கியுள்ளனர். அத்துடன் கடைக்கு பொருட்களை வாங்க வந்தவர்கள் மீதும் கண்மூடித்தனமாக இவர்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதனால் பலர் பாதிப்புக்கு உள்ளாகியதுடன் துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள் என்பன சேதமடைந்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பதிவு விதிமுறைகளுக்கு உட்படாத வாகனங்கள் மீது நடவடிக்கை

தமிழீழ மோட்டார் ஊர்தி பதிவு விதிமுறைகளுக்கு உட்படாமல் பயன்பாட்டில் உள்ள அல்லது பயன்பாடற்று உள்ள ஊர்திகளின் உரிமையாளருக்கு தமிழீழ நீதிமன்றம் ஊடாக எதிர்வரும் 01.11.2003 தொடக்கம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பதை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

## யாழ். முடமாவடிச்சந்தியில் படையினர் திடீர்ச் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி கிழக்கு முடமாவடிச் சந்திப் பகுதியில் என்றும் இல்லாதவாறு திடீர் ரோந்து மற்றும் சோதனை நடவடிக்கையில் பொலிசாரும் படையினரும் இணைந்து ஈடுபட்டனர்.

நேற்றைய தினம் நடைபெற்ற இச்சோதனை நடவடிக்கையின் போது சுமார் 50 வரையான படையினரும் பொலிசாரும் மதியம் முதல் மாலை வரை ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்நடவடிக்கையின் போது வீதியால் சென்ற சகலரும் நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டதுடன் இளைஞர்களை கடும் விசாரணைக்கு உட்படுத்தினர். (33)

## - திருமலை குரங்குபாஞ்சான் பகுதியில் -
## முஸ்லீம்களின் நெற்செய்கை குறித்து புலிகள் - முஸ்லீம்கள் சந்தித்துப் பேச்சு

திருகோணமலை குரங்குபாஞ்சான் மற்றும் அப்பகுதி கிராமங்களில் முஸ்லிம்கள் நெற்செய்கை மேற்கொள்வது பற்றி நேற்று தமிழீழ விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளுக்கும் முஸ்லீம் தரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. கிண்ணியாவின் ஆலங்கேணி மகாவித்தியாலயத்தில் முற்பகல் 10 மணி முதல் ஒன்றரை மணி நேரம் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் குரங்குபாஞ்சான் தீனேரி, வெள்ளாங்குளம் ஆகிய கிராமங்களில் நெற்செய்கை மேற்கொள்வது பற்றி ஆராயப்பட்டுள்ளது. நெற்செய்கையின் போது வயல்களில் காவல்கொட்டில்களை அமைப்பது, போக்குவரவு செய்வது பற்றிய ஒழுங்குகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இதன்படி திங்களன்று பிரதேச விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளுடன் பயிர்ச்செய்கை இடங்களுக்கு நேரடியாகச் சென்று முடிவுகளை இறுதி செய்யவுள்ளார்கள்.

(8ஆம் பக்கம் பார்க்க)



## வவுனியாவில் கைக்குண்டுத் தாக்குதல் காயமடைந்த மூவர் ஆஸ்பத்திரியில்

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தோரில் மூவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11.15 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும், மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் வவுனியா பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்களில் ஆசிரியர் ஒருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21,10)

## அமைச்சர்கள் இருவரை கொல்லத் திட்டமிட்டனராம்

### சிலாபத்தில் இருவர் பொலிசாரால் கைது

அமைச்சர்கள் இரண்டு பேரை கொலை செய்யத் திட்டமிட்டதாக சந்தேகிக்கப்படுகின்ற இருவரை சிலாபம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவர்களிடமிருந்து கைக்குண்டுகள் மற்றும் கத்திகள் என்பன கைப்பற்றப்பட்

(8ஆம் பக்கம் பார்க்க)

## போட்டிகள் நடத்தவும் தடை!

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பாடசாலை மட்டத்திலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்துக்கூட படைத்தரப்பினர் அனுமதி மறுத்துள்ளதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கவலை தெரிவித்துள்ளனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபரை மோதிய ராணுவ உந்துருளி தப்பி ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

மிதிவண்டியில் வந்தவரை மோதிய இராணுவ உந்துருளி தப்பியோடியது.

நேற்று பருத்தித்துறை வீதி நீர்வேலிப்பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நல்லையா (வயது 65) என்பவரே மோதுப்பட்டவராவார். சம்பவம்பற்றித் தெரியவருவதாவது, அண்மையில் உள்ள கடை ஒன்றிற்குச் சென்று விட்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்த பிரஸ்தாப வயோதிபரை அதே வீதியால் வந்த இராணுவ உந்துருளி ஒன்று பின்புறமாக மோதியது. வீழ்ந்த வயோதிபர் சிறு காயங்களுடன் தப்பித்துக் கொண்டார்.(33)

## வரி விளம்பரம்

### வியாழன், ராகு, கேது மாற்றம் உங்களுக்கு எப்படி?

எங்கும் விற்பனையாகின்றது. ரூபா 15/- கணிப்பாசிரியர் - **PROF.** சத்தியதாஸன் எல்லா ராசிகளின் பலன்கள் கிடைக்குமிடம்: குமரன்ஸ், ருக்மணி புத்தகசாலைகள், புதுக்குடியிருப்பு. அறிவு வைரவர் முல்லைத்தீவு, பிள்ளையார் சிறிசத்யசாயி, கிளிநொச்சி. (சி-8664)


## தடுப்பு மருந்து பெறவும்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த மாதம் பிறந்த குழந்தைகளுக்கு பீசீஜி **(BCG)** தடுப்பு மருந்து பெற்றுக் கொள்ளாதவர்கள் வைத்தியசாலைக்கு தங்களது குழந்தைகளுடன் வந்து **BCG** தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி அவர்கள் அறியத்தருகிறார்.

# சு.க. - ஜே.வி.பி. கூட்டணி தொடர்பாக பேச்சுக்கள் நடத்த ஜே.வி.பி.க்கு அழைப்பு

## சு.க. செயலாளர் மைத்திரிபால சிறிசேன

சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. இனை கூட்டணியமைப்பது தொடர்பாக மீண்டும் பேச்சுக்களை நடத்துவதற்காக சுதந்திரக் கட்சி செயலாளர் மைத்திரிபால சிறிசேன, ஜே.வி.பி.செயலாளர் ரில்வின் சில்வாவுக்கு கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

அதற்கிணங்க இரு பகுதியினருக்குமிடையே விரைவில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் தொடங்கும் என தாம் எதிர்பார்ப்பதாக மைத்திரி பால சிறிசேன பத்திரிகையாளர் சந்திப்பொன்றின்போது தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியிருப்பதாவது சனாதிபதிக்கு அதிகாரம் இருப்பினும் மக்களின் பலம் அவருக்கு கிடையாது என ஐ.தே.முன்னணியோ அவரது ஆதரவாளர்களோ தெரிவித்தாலும் மக்களின் ஆதரவு எமக்குக் கிடைத்துவிட்டது என்பதை எதிர்வரும் 24ஆம் திகதி அறிந்து கொள்ளமுடியும் என்று கூறியுள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக பல கட்சிகளுக்கும் தொழிற் சங்கங்களும் அழைப்பு விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளுடன் அரசு ஏற்படுத்தியுள்ள நாட்டை பிரிக்கும் நடவடிக்கைகளைக் கண்டித்தும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் உரிமைகளைக் கோரியும் இன்னும் பல கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

# நட்டாங்கண்டல் பகுதியில் வீடு தீப்பிடித்து எரிந்தது

(மல்லாவி)

மல்லாவி நட்டாங்கண்டல் பகுதியில் விற்பனைக்காக உணவுவகை தயாரித்துவரும் ஒருவரது வீடு தீக்கிரையானது. பொன்நகர் பகுதியில் வசித்துவரும் வரதராசா கதிரவேலு என்பவரின் வீடே முற்றாக எரிந்தது. மிக்ஷர் தயாரிப்புக்காக அடுப்பில் எண்ணைத் தாச்சியை வைத்து மிக்ஷர் தயாரித்தபோது எண்ணெய்த் தாச்சி சரிந்து எண்ணெய் அடுப்பிற்குள் ஊற்றப்பட்டதால் எழுந்ததீயில் வீடு தீப்பற்றி எரிந்து நாசமானது. கடந்த வியாழன் பிற்பகல் 4.30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. வீடு தீப்பற்றிக் கொண்டதுடன் அயலவர் உதவியுடன் தீயை அணைக்க முயற்சி செய்தும் எவ்வித பயனும் காணாது முற்றாக எரிந்து நாசமானது. இதன போது எவ்வித பொருட்களையும் மீட்க முடியாத நிலையிலும் எரிந்துள்ளன.(24)

# ஆங்கிலதின மாகாணப் போட்டியில் வட்டக்கச்சி ம.வி. வெற்றி

வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவர்கள் ஆங்கில தினப் போட்டியில் மாவட்டமட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவாகி திருகோணமலை மாகாண மட்டப் போட்டிக்குச் சென்று அப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்கள். தொடர்ந்தும் இச்சிறிய மாணவர்கள் பல போட்டிகளில் பங்குபற்றி மாகாண மட்டப் போட்டிக்குச் செல்லவேண்டும் என்று பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் வாழ்த்தியுள்ளனர். (12)

# உலக விவசாய தினத்தை முன்னிட்டு விவசாயிகளுக்கு விதைதானியம் வழங்கல்

உலக விவசாய தினத்தை முன்னிட்டு உலக விவசாய ஸ்தாபனத்தின் உதவியுடன் முள்ளியவளை கமநல அபிவிருத்திச் சேவைத் திணைக்களமும், முள்ளியவளை பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து அப்பகுதி விவசாயிகளுக்கு விதை தானியம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வானது கடந்த 16ஆம் திகதி காலை 9.00 மணிக்கு முள்ளியவளை கமநல சேவை திணைக்கள ஒன்றுகூடல் மண்டபத்தில் கமநல அபிவிருத்தி சேவை உத்தியோகத்தர் செல்வி. இராசலட்சுமி தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பகுதிப் பொறுப்பாளர் க.தமிழரசன் மங்கல விளக்கினை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து உலக விவசாய தினத்தின் முக்கியத்துவம் விவசாய செய்கையின் முக்கியத்துவம் பற்றிய கருத்துரைகளைத் தொடர்ந்து 400 விவசாயிகளுக்கு நெல், உழுந்து, சோளம் போன்ற உள்ளீடுகள் மானியமாக வழங்கப்பட்டது. முள்ளியவளைப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் இ.ரமேஸ்சின நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவானது. (ஆ)

# 200 வாகனங்களை மோசடியாக விற்பனை செய்த பொலிஸ் அதிகாரி

(கொழும்பு)

வெலிகட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மோசடியாக வாகன விற்பனையில் ஈடுபட்ட சம்பவம் குறித்து மீரிஹன பொலிசார் தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தர் இரண்டு பெண்களுடன் சேர்ந்து தவணை அடிப்படையில், வாகனங்களைக் கொள்வனவு செய்து, பின்னர் அந்த வாகனங்களை வேறு நபர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளனர். அதேபோல் வாகனங்களைத் தவணை அடிப்படையில் விற்பனை செய்த நிறுவனங்களுக்கான பணத்தையும் உரிய முறையில் இவர்கள் செலுத்தவில்லை என தெரியவந்துள்ளது. இக் குற்றச்செயல் எதிர்ப்பில் குறிப்பிட்ட பெண்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 10 வருடங்களாக மேற் கொண்டு வந்த இந்த வாகன விற் பனையின் போது சுமார் 200 வாகனங்கள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. (32)

## கண்கட்ரூட் சிகிச்சை

"கண்வில்லை பொருத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டு கிளி.மாவட்ட வைத்தியசாலையில் பதிவுசெய்யப்பட்டவர்கள் சிகிச்சைக்கு வவுனியா செல்லும் ஆயத்தங்களுடன் 2003.10.30 காலை கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு வருகைதருமாறு கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி அவர்கள் அறியத் தருகிறார்." என்றார்.

# புதுக்குடியிருப்பு ம.வி. நாடகப் போட்டியில் முதலிடம்

கடந்த 10ஆம் திகதி பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இவ்வருட அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டியில் மு/புதுக்குடியிருப்பு ம.வி.யின் "யாதுமாகி" என்ற நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இந் நாடகத்தைப் புதுக்குடியிருப்பு ம.வி. நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரியர் செல்வக்குமார் அவர்கள் நெறியாள்கை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (26)

# யாழ். மட்டு. திருமலைக்கு சர். மன்னிப்புச்சபை அதிகாரிகள்

மனிதவுரிமை மீறல்கள், கைதுகள், சித்திரவதைகள், தேர்தல் வன்முறைகள் பற்றிய ஆய்வினை மேற்கொள்வதற்காக இலங்கை வந்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் அதிகாரிகள் குழு அடுத்த வாரம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை போன்ற இடங்களுக்குச் செல்லவுள்ளது.

அமெரிக்கா, சுவீடன், பிறேசில், ஜப்பான், கானா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 13 அதிகாரிகள் குழுக்களாகப் பிரிந்து இம் மாவட்டங்களுக்குச் செல்லவுள்ளனர். பெப்ரல் அமைப்பின் உதவியுடன் இப் பணியினை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக் குழுவினர் ஆய்வு அறிக்கை ஒன்றை சர்வதேச மன்னிப்புச் சபைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (32)

# வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் முன்பள்ளி விளையாட்டுப் போட்டிகள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிக் கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வடமராட்சிக் கிழக்கில் (இராணுவ கட்டுப்பாடு அற்ற பகுதியில்) இயங்கும் 17 முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. இப்பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்தவுடன் முன்பள்ளிகளை வடமராட்சிக் கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழகம் எல்லாக் கிராமங்களிலும் நிறுவியது அதன்படி தற்போது 17 முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. எல்லா முன்பள்ளிகளையும் இணைந்து பெரும் விளையாட்டுப் போட்டி ஒன்றை முன்பள்ளிகளிடையே நடத்தவுள்ளது. (11)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு இரு இடைத் தங்கல் முகாம்கள்

## யுனிசெப் பிரதிநிதி தெரிவிப்பு

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் இடைத் தங்கல் முகாம் வருட இறுதிக்குள் மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் திறக்கப்படுமென யுனிசெவ் நிறுவன மட்டக்களப்புப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஆயித்தியமலையில் இதற்கான கட்டடம் அமைக்கப்பட்டுவருகின்றது. இங்கு கட்டட வேலைகள் பூர்த்தி அடைந்தவுடன் இவ்வருட இறுதிக்குள் இடைத் தங்கல் முகாம் திறக்கப்படுமெனவும், முதலாவது தொகுதியில் 150 சிறுவர்கள் தங்கலாமெனவும் இம்முகாமில் கல்வி மற்றும் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டுப் பெற்றோர்களிடம் அவர்கள் ஒப்படைக்கப் படுவர் எனவும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தமது குடும்பங்களுடன் இணைய முடியாத நிலை இருப்பினும் அவர்களுக்கு உளவியல் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் சமூக செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டு பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

புலிகளால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களை யுனிசெவ் நிறுவனப் பிரதிநிதிகள் வீடுகளுக்குச் சென்று அவர்களின் நலன் தொடர்பாகக் கண்காணிப்பார்களென அவர் கூறியுள்ளார்.

# தலைவரை இழந்த குடும்பங்களுக்கு கோழிவளர்ப்பிற்கு உதவி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் இராணுவக் கட்டுப்பாடு அற்ற பகுதியில் உள்ள கிராமசேவகர் பிரிவில் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு மூவிங்மேன்ட் நிறுவனம் 10 கோழிகளையும் அதற்கான இரும்பு நெற்றிலான கூடும், மூன்று மாதங்களுக்கான கோழி உணவும் கோழிக்கு நோய் வராமல் தடுப்பதற்கான தடுப்பு மருந்தும், கோழிக்கு நீர்த் தொட்டி (நடிநீக்கான்) போன்றவற்றை மூவிங்மேன்ட் நிறுவனம் கிராம சேவகர்களினூடாக வழங்கியுள்ளது. (11)

# முல்லை. வலய பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான ஒன்றுகூடல்

முல்லை. வலய பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான ஒன்றுகூடல் எதிர்வரும் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தில் இடம்பெற இருப்பதால் அனைத்து முல்லை. வலய பல்கலைக்கழக புகுமுக மாணவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (26)


## தமிழீழ வைப்பகம்

# உந்தூர்தி ஏல விற்பனை

## 22-10-2003

தமிழீழ வைப்பகத்தின் பாவனையிலிருந்த ஐந்து (05) HONDA MD-90 இன உந்தூர்திகள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளன. உந்தூர்திகளைப் பார்வையிட விரும்புவோர் 2003-10-15 ஆம் நாள் தொடக்கம் 2003-10-21ஆம் நாள் வரை கிளிநொச்சி கரடிப்போக்கு இல: 63 இல் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்தில் பணி நேரத்தில் பார்வையிடலாம்.

ஏல விற்பனை 2003-10-22ஆம் நாள் நண்பகல் 12.00 மணிக்கு தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்தில் நடைபெறும்.

மேலாளர்,
ஆளுகை,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-8655)

# பொலிவியா சனாதிபதி பதவி விலகல்; மக்கள் பெரும் மகிழ்ச்சி ஆரவாரம்!

**பொலிவியா சனாதிபதி கொன்சாலோசன்சஸ் டி லொசாடா பதவி விலகினார். பதவி விலகுமாறு கோரி மக்கள் போராட்டத்தை தீவிரப் படுத்தியதைத் தொடர்ந்தே அவர் இம்முடிவை மேற்கொண்டார்.**

அமெரிக்க ஆதரவுக் கொள்கையையும், தாராள சந்தைப் பொருளாதாரக்கொள்கையையும் ஆட்சேபித்தே இவருக்கெதிரான போராட்டங்கள் தீவிரம் பெற்றிருந்தன.

கடந்த ஒரு மாதகாலமாக இடம்பெற்ற மக்கள் போராட்டங்களில் எழுபதுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். மேற்படி போராட்டங்களால் தலைநகரும் ஸ்தம்பித நிலைக்கு ஆளாகியது.

இந்நிலைமைகளை அடுத்து சனாதிபதி லொசாடா (வயது-73) பதவியை விட்டுவிலகுவதாக அறிவித்துள்ளார்.

சனாதிபதியின் இந்த முடிவினால் ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளில் இறங்கி மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.



பாக்தாத்துக்கு தெற்கே 110 கி.மீ. தூரத்திலுள்ள கர்பாலாவில் ஈராக் போராளிகளுக்கும், அமெரிக்கப் படையினருக்குமிடையில் நடைபெறும் துப்பாக்கிச் சமரின் போது நிலை எடுக்கும் ஈராக்கிய போராளிகள்.




ஆசிய நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பித்துள்ள அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அவரது பாரியாருடன் முதலில் ஜப்பான் வருகை தருவதையும் மற்றும் டோக்கியோவில் இவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடைபெறுவதையும் படங்களில் காண்க. (தொடர்ந்து பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இந்தோனேசியா, சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியாவுக்கும் அவர் செல்லவுள்ளார்)

# சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு மூன்று விண்வெளி வீரர்கள் பயணம்

விண்வெளியில் இருக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடையவென அமெரிக்க மற்றும் ரஷ்ய விண்வெளி வீரர்கள் மூவர் கஸகஸ்தானில் இருந்து நேற்று புறப்பட்டனர்.

இவர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் நாளை இணைவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஓடமான கொலம்பியா பூமிக்குத் திரும்பிய போது விபத்துக்குள்ளாகியதைத் தொடர்ந்து சர்வதேச விண்வெளி நிலையத்துக்கான விண்வெளி வீரர்களையும் பொருட்களையும் ரஷ்யாவே அனுப்பி வருகின்றது.

# காஸா பிரதேசத்திற்குச் செல்ல அமெரிக்க அதிகாரிகளுக்குத் தடை!

காஸாப் பகுதியில் மூன்று அமெரிக்கப் பாதுகாப்பு படைவீரர்கள் கொலை செய்யப்பட்டதையடுத்து இஸ்ரேலில் உள்ள அமெரிக்க தூதரகம் காஸா பிரதேசத்துக்கு அமெரிக்க அதிகாரிகள் செல்வதைத்தடை செய்துள்ளது.

மூன்று வருடகாலமாக நடைபெற்றுவரும் பலஸ்தீனப் போராட்டத்தில் அமெரிக்கர்கள் மீது இலக்கு வைத்து தாக்கப்பட்டமை இதுவே முதல் தடவை என்று சிரேஷ்ட அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரேலில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து கடந்த புதன்கிழமை காஸா பிரதேசத்துக்குச் சென்ற அமெரிக்க அதிகாரிகளின் வாகன அணி மீது கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டபோதே மூன்று அமெரிக்க படை அதிகாரிகளும் கொல்லப்பட்டனர்.

# ஈராக்கில் அமெரிக்க நிர்வாகத்திற்கு ஐ.நா. சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கல்!

ஈராக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசு ஆட்சிக்கு வரும் வரை ஈராக்கை ஆட்சி செய்ய அமெரிக்கா தலைமையிலான நிர்வாகத்திற்கு சட்டபூர்வ அதிகாரம் வழங்கும் அமெரிக்காவின் தீர்மானத்தை ஐ.நா.சபை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஈராக்கின் மீது அமெரிக்கா தலைமையிலான போரிற்கு எதிர்ப்புத் தெரிவித்த பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மன் ஆகிய நாடுகள் முக்கிய மாற்றங்கள் குறித்த தங்களது கோரிக்கைகள் மறுக்கப்பட்ட போதிலும் இத்தீர்மானத்திற்கு ஆதரவாக அவை வாக்களித்துள்ளன. ஈராக் சம்பந்தமான அமெரிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையை வரவேற்ற ஐ.நா.சபையின் செயலாளர் கோபி அனான் ஏனைய விடயங்களைவிட ஈராக்கிய மக்களின் நலன்கள் மீது ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகள் கொண்டுள்ள கவனத்தை இது தெளிவாக எடுத்துக்காட்டுவதாகக்கூறியுள்ளார்.

ஈராக்கிய புதிய சனநாயகத்தைத் தோற்றுவிக்க சர்வதேச ஒத்துழைப்பைப் பெற உதவும் அமெரிக்காவின் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக ஐ.நா. சபைக்கு புஷ் நன்றி கூறியுள்ளார்.

# அல் – ஹைறதா ஆதரவாளர்கள் சவூதி அரேபியாவில் விடுதலை

(ரியாத்)

சவூதி அரேபியாவில் அல்-ஹைறதா இயக்க அனுதாபிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கூடம் ஒன்றை அந்த நாட்டு அதிகாரிகள் உடைத்து விடுதலை செய்துள்ளனர்.

கடந்த வருடம் கைது செய்யப்பட்ட பத்து அல்-ஹைறதா அனுதாபிகளில் அமெரிக்கர் ஒருவரும் அடங்கியிருந்ததாகத், தம்மை இனங்காண்பிக்க விரும்பாத சவூதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பத்து அல்-ஹைறதா அனுதாபிகளும் சவூதி அரேபிய அரசுக்குச் சொந்தமான சவூதி அரம்கோ என்ற எண்ணெய் கம்பனியில் பணியாற்றி வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மனித உரிமையாளர் சுட்டுக் கொலை

கொலம்பியாவில் மனித உரிமை நடவடிக்கையாளரான நாற்பது வயது நிரம்பிய அமாரிஸ்மிராண்டா அந்த நாட்டின் தீவிர வலது சாரி துணை ராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.


அவர் வீட்டில் இருந்த சமயம் மூன்று நபர்கள் அவரை வாடகை மோட்டார் வாகனம் ஒன்றில் பலவந்தமாக ஏற்றிச் சென்று நகர்ப்புறத்தில் வைத்து சுட்டுக் கொண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# லிபிய அணுவாயுத அபிவிருத்திக்கு உதவி இஸ்ரேலின் குற்றச்சாட்டு நிராகரிப்பு

லிபியா அணுவாயு தங்களை அபிவிருத்தி செய்வதற்கு பாகிஸ்தான் ஒத்துழைப்பு வழங்குவதாக இஸ்ரேல் கூறும் குற்றச்சாட்டை பாகிஸ்தான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் நிராகரித்துள்ளார்.

வடகொரியா, பாகிஸ்தானின் உதவிகளைப் பெற்று லிபியா அணுவாயுதங்களை அபிவிருத்தி செய்து வருவதாக இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் அண்மையில் குற்றம் சாட்டியுள்ளதாக இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள பாகிஸ்தான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர். தவறான தகவல்களை வெளியிட வேண்டியதில்லை. பாகிஸ்தான் எந்த ஒரு நாட்டிற்கும் இத்தகைய உதவிகள் செய்யப் போவதில்லை அப்படிச் செய்யும் நோக்கமும் இல்லை எனக் குறிப்பிட்டார்.

லிபியாவும், ஈரானும் அணுவாயுத அபிவிருத்தியில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் தடைச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் வெளிநாடுகளின் ஒத்துழைப்பு இந் நாடுகளுக்கு கிடைத்து வருகிறது என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.



சீனாவின் சங்காய் நகர உயர்தர வீதி ஒன்றில் பயணிக்கும் வாகனங்கள். (கடந்த ஆண்டு சீனாவின் கார் உற்பத்தி 90 வீதத்திலிருந்து 125 வீதத்துக்கு வளர்ச்சியடைந்துள்ளது)

# சர்வசன வாக்கெடுப்பை தவிர்க்க சனாதிபதி வேண்டுகை!

வெனிசுவெலாவில் சனாதிபதி சிகோசாவே தமது ஆட்சிக்கு எதிராக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு ஆதரவு வழங்க வேண்டாம் என்று மக்களிடம் கேட்டுள்ளார்.

தமக்கு எதிராக வாக்களிப்பவர்கள் அவர்களது நாட்டுக்கும் எதிர்காலத்துக்கும் எதிராக வாக்களிப்பவர்கள் என்று சனாதிபதி சாவே கூறியுள்ளார்.


சர்வசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று கூறி வரும் சனாதிபதியின் எதிர்ப்பாளர்கள் நவம்பர் மாதம் 28ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் முதலாம் திகதி வரை சனாதிபதிக்கு எதிராகப் பொது மக்களிடம் இருந்து கையெழுத்து பெறும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

## சதாம் விஜயம்!

ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன் அவரது சொந்த நகரான ரிக்ரிட்டிற்கு, அண்மையில் வந்துள்ளார் என அமெரிக்க இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

அண்மையில் இந் நகரிற்கு வந்தமைக்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக அவர்கள் மேலும் கூறியுள்ளனர். ஆனால் எப்படி வந்தார் என்பது பற்றி இவர்களால் கூறமுடியாதுள்ளது.

சதாம் தலைநகரிலிருந்து 150 கிலோமீற்றர் எல்லைப் பரப்பிற்குள் தனது செயற்பணிகளை மேற்கொண்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.



தாய்பே நகரிலுள்ள 101 மாடிகளைக் கொண்டதும் 508 மீற்றர் உயரத்தைக் கொண்டதுமான உலகில் உயரமான கட்டடம் பிரமாண்டமாக காட்சியளிக்கின்றது.

# ‘வடமாநிலத் தேர்தல்’

# அயோத்தியால் தடுமாறும் பா.ஜ.க.

இந்தியாவில் வெகுவிரைவில் வடமாநில தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதற்கான தேர்தல் அறிவிப்புக்களை தேர்தல் ஆணையகம் வெளியிட்டுள்ளது. ஆளும் கட்சிகளும் எதிர்க் கட்சிகளும் சரி தேர்தல் பிரச்சாரத்தில் வெகு முனைப்பாக இறங்கியுள்ளன.

டில்லி, மிசோராம் மத்திய பிரதேசம், சத்திஸ்கார், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெற்று வருகின்றது. இதனைத் தகர்த்து தாம் வடமாநிலங்களைக் கைப்பற்றி விடுவதில் பாரதீய ஜனதாக் கட்சி வெகு முனைப்பாக தனது நடவடிக்கைகளை செயற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

அதேபோல் தனது ஆட்சி நடைபெறும் மாநிலங்களை மீண்டும் தம்வசமே வைத்திருப்பதிலும், அதனைத் தக்க வைத்துக் கொள்வதிலும் காங்கிரஸ் கட்சியும் மிகவும் வெற்றி இலக்குடன்தான் செயற்படுகின்றது.

ஆனால், பாரதீய ஜனதாக் கட்சியோ தனது தேர்தல் பிரச்சாரத்திற்கு அயோத்தியைக் கையிலெடுத்துள்ளது. இது ஒன்றும் அபூர்வமான விடயமல்ல என்பது மட்டுமன்றி எதிர்பார்க்கப்பட்ட வழமையான ஒரு விடயமும் தான்.

பாரதீய ஜனதாவின் எழுச்சியின் மிகப் பெரிய பங்கு அயோத்திக்கு மட்டுமேயுண்டு. தேர்தல்வரும் போதெல்லாம் அயோத்தியும் மிகவும் முனைப்பாக எழுந்து நிற்கும். தேர்தல் முடிந்ததா... அயோத்தியும் காற்றுப்போன பலூனாக சுருங்கிவிடும். மறுபடியும் அந்த பலூனுக்குக் காற்றடிக்கப்படுவது அடுத்த தேர்தலின்போதுதான்.

ஆனால், இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து அயோத்திப் பிரச்சினையும் இருந்து வருகின்றது என்பதுதான் முக்கியமானதும் வருந்தத்தக்கதுமான விடயமாகும்.

இராமர்கோயில் இருந்த இடத்தில்தான் பாபர் மசூதி கட்டப்பட்டதாக இந்துக்கள் ஆணித்தரமாக இன்றுவரை நம்புகின்றார்கள்.



அதனால்தான் 1949இல் பாபர் மசூதிக்குள் இராமருடைய விக்கிரகத்தை வைத்து வணங்கினார்கள். இதற்கு முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

அத்துடன் முதன் முதலாக அயோத்தி விவகாரம் முஸ்லிம்களால் நீதிமன்றத்திற்குச் சென்றதும் இதன்போதுதான். இதனை அடுத்து 1989இல் இந்த வழக்கு அலகாபாத் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை முடிவடைவதற்கு முன்னரே பாபர் மசூதி 1992ஆம் ஆண்டு டிசம்பர் ஆறாம் திகதி உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி தலைமையில் இடிக்கப்பட்டது.

பாபர் மசூதி இடிப்பு வழக்கு டில்லி உயர் நீதிமன்றத்தில் இன்றும் உள்ளது.ஆக மொத்தம் அன்று தொட்டு இன்று வரை அயோத்தி விவகாரம் தீர்க்கப்படவில்லை என்பதுடன் நீதிமன்றங்களில் தீர்க்கப்படாத வழக்காக இன்று வரையும் அதுதான் உள்ளது என்பதில் தவறில்லை என்றே கூறமுடியும்.

ஏன் இன்று வரை இந்த அயோத்தி தீர்க்கப்படாத வழக்காக உள்ளது.....?

பாபர் மசூதியை இடித்தது பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் என்றாலும், காங்கிரஸ் கட்சியின் ஆட்சியின்போது இந்த இடிப்பு நடைபெற்றது.

1992இல் உத்தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாவின் ஆட்சிதான் நடைபெற்றது. ஆனால், மாநில அரசைத் தட்டிக்கேட்கும் உரிமை மத்திய அரசிற்கு உண்டு. காங்கிரஸ்தான் மத்தியில் ஆட்சி செய்தது. ஏன் தட்டிக்கேட்கவில்லை?

அது மட்டுமின்றி, 1992இல் குஜராத் மாநிலம் சோமநாதபுரத்தில் இருந்து பெரும் படையுடன் அத்வானி “பாபர் மசூதியை மண் மேடாக்கி இராமருக்கு ஆலயம் எழுப்புவோம்” எனும் முழக்கத்துடனதான் ரத யாத்திரையை நடத்தினார்.

இந்த ரத யாத்திரையை காங்கிரஸ் அன்று தடுத்து நிறுத்தவில்லை ஏன்?

இந்த ரத யாத்திரை முடிந்த பின்னர்தான் காவிப் படைகள், மசூதியைத் தரைமட்டமாக்கியது என்றால் ரத யாத்திரைக்கும் இடிக்கப்படுவதற்கும் இடையில் உள்ள காலத்தை அன்று மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் தடுத்து நிறுத்தியிருக்கப் பயன் படுத்தியிருக்கலாம். ஆனால் அதுவும் செய்யவில்லை ஏன்?

பாபர் மசூதி இடிப்பிற்கான ரத யாத்திரையை தடுத்தல் அல்லது இடித்த பின்னர் மத்திய அரசு நடவடிக்கை எடுத்தல்... என்பனவெல்லாம் இந்துக்களின் வாக்குகளை காங்கிரஸ் பெறமுடியாத நிலைக்குத்தான் கொண்டு செல்லும் என்பது காங்கிரஸுக்குப் புரியாத விடயமல்ல.

அதேநேரம் அயோத்தில் இராமர் இராஜ்ஜியத்தை உருவாக்கப் போவதாக கூறித்தான் ஆட்சிப் பீட ஏறியவர் சோனியா என்றும் கூறப்படுகின்றது.

எனவே, மத சார்பின்மையை வெளிப்படைக் கொள்கையாகக் கொண்டாலும் காங்கிரஸ் மத சார்பை மறைமுகமாக கைக்கொள்ளத் தவறவில்லை என்றே கூற வேண்டும்.

இதனால்தான், அயோத்திப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அன்று ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியும் சரி, இன்று ஆட்சி செய்யும் தேசிய முன்னணியும் சரி முன்வரவில்லை என்பது வெளிப்படையுண்மை.

மத சார்புக் கொள்கையும் சரி, மத சார்பின்மைக் கொள்கையும் சரி ஆட்சியெனும் கதிரைக்காக மட்டுமேயன்றி, மக்களின் நலன் என்பது கேள்விக்குறியாகத்தான் இதுவரை இருந்து வருகின்றது என்றே கூறவேண்டியுள்ளது.

இந்துக்களைப் பாதிக்கும் எந்த விடயத்தையும் காங்கிரஸோ பாரதீய ஜனதாவோ முன்னெடுக்க வராத பட்சத்தில் அயோத்தி வழக்கு எப்படித் தீர்க்கப்பட முடியும்.

அதனால்தான், அயோத்திப் பிரச்சினையும் சரி, அயோத்தி வழக்கும் சரி இன்றுவரை தீர்க்கப்படவில்லை என்பது மட்டுமன்றி இனி வரும் காலத்திலும் தீர்க்கப்படுமா....? என்பது பெரிய வினாவாகத்தான் இருக்கப்போகின்றது.

அதேநேரம், 1992இல் அயோத்தி வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட அன்றைய உள்துறை அமைச்சர் அத்வானி, அந்த வழக்கில் நிரபராதி என்று குற்றச்சாட்டுக்களில் இருந்து வெளிவருவதற்கு முன்னரே அடுத்துவந்த தேர்தலில் துணைப் பிரதமர் ஆகிவிட்டார்.

எனவே, உள்துறை அமைச்சராக இருந்த போதே, அவரின் மீதான குற்றச்சாட்டுக்களை பதிவு செய்ய நீதிமன்றங்களினால் முடியவில்லை எனில் இன்று அத்வானி துணைப் பிரதமராக இருக்கும்போது மட்டும் அவர் மீது குற்றச்சாட்டுக்களை நீதிமன்றம் பதிவு செய்வது இயலுமான காரியமா? எனும் வினா மிக இலகுவாக எழுப்பிவிட முடியும்.

இதுதான் அண்மையிலும்கூட நடந்தது. கடந்த மாதம் துணைப் பிரதமர் அத்வானி முதல் எட்டு பேர் மீதான குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக டில்லி தனி நீதிமன்றம் பரபரப்பாக அறிவித்திருந்தது.

ஆஹா... துணைப் பிரதமர் உட்பட எட்டுப் பேர் மீதும் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்படுமானால் அடுத்த கட்டம் அவர்கள் சிறை வாசம்தான் அனுபவிப்பார்கள்.

இதனைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு பாரதீய ஜனதாவின் செல்வாக்கை சரித்து விடலாம் என காங்கிரஸ் உட்பட எதிர்க்கட்சிகள் ஆரவாரம் செய்தது என்னவோ உண்மை தான்.

அதனால்தான், துணைப் பிரதமர் அத்வானி மத்திய அமைச்சர் மனோகர் ஜோஷி இருவரும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்வது உகந்தது எனக் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கேட்டிருந்தார்.

ஆனால், அத்வானி மேன்முறையீடு செய்தார். தனது குற்றச்சாட்டுப் பதிவுகளில் இருந்து தப்பித்துக் கொண்டார். ஏனையவர்கள் பற்றிய விமர்சனம் இல்லாது அமுங்கிப்போய் விட்டது.

இதனால்தான் பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி இருவரும் அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவது என்பது மத்திய அரசின் கொள்கையில் ஒன்றல்ல, அது அயோத்தியில் அகழ்வாராய்ச்சியிலும் நீதிமன்றத் தீர்ப்பிலும் தான் தங்கியுள்ளது என சிறிது காலம் சொல்லிக் கொண்டார்கள்.

இதேநேரம், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும் மத சார்பு கொள்கையை கையில் எடுத்துள்ளார். “அயோத்தியில் இராமர் கோவில் கட்டாமல் வேறு எங்கே கட்டுவது?” என வினா எழுப்பினார். இதன் மூலம் விஸ்வ ஹிந்து பரிஷத் ஆர். எஸ்.எஸ். அமைப்புக்களின் நன்மதிப்பையும் பெற்றுள்ளார்.

அது மட்டுமன்றி கோவில்களில் பலியிடுதலையும் தடை செய்யும் 1950ஆம் ஆண்டு சட்டத்தை தற்போது அவர் தூசு தட்டிக் கையில் எடுத்துள்ளார்.

இதுவும் இந்துத்துவ எனும் மத சார்புக் கொள்கையை ஆதரிப்பதும், இந்துக்களை தன்வசம் கவரும் முக்கிய நடவடிக்கைகளாக இருக்கின்றன.

இதனால்தான், விஸ்வ ஹிந்து பரிஷத்தும் ஆர். எஸ்.எஸ். அமைப்பும் பிரதமர் வாஜ்பாய் தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத அளவில் இருக்கின்றார் என்றால், அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்து விடலாம். எமது கொள்கைகளை நிறைவேற்றக் கூடியவர்களிடம் பதவியைக் கொடுப்பதும் நன்மை அளிக்கும்.

தேர்தலின்போது பசுவதைச்சட்டம், அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவது பொது சிவில் சட்டம், 370ஆவதுசட்டப்பிரிவு என்பவை தனது மூச்சு என்று முழங்கியவர் வாஜ்பாய்.

அதனால்தான், சாதுக்கள் கரசேவர்கள், இந்து சமயப் பெரியவர்கள், இந்து சமாஜங்கள் என இந்துக் கொள்கையுடையவர்கள் அனைவரும் வாக்களித்துப் பிரதமர் ஆக்கினோம்.

ஆனால், இன்றோ அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவது என்பது நீதிமன்றத் தீர்ப்பு என்று மிகச் சுலபமாக எங்களை ஏமாற்றப் பார்க்கின்றார்.

அடுத்த தேர்தல்வருகின்றதுதானே பிரதமர் வாஜ்பாயை பதவி இறக்கி எமது கொள்கையை ஆதரிப்பவரை பிரதமராக்க பாடுபடுவோம் என விஸ்வ ஹிந்து பரிஷத் மிரட்டல் விடுத்துள்ளது.

இதனால்தான் தற்போது விஸ்வ ஹிந்து பரிஷத் குரலுக்கு பாரதீய ஜனதா தாளம் போட வேண்டிய நிலையில் உள்ளது.

இல்லையெனில், தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில் வட மாநிலங்களில் கோட்டை விடுவதன் மூலம் பாராளுமன்றத் தேர்விலும் மண் கவ்வ நேரிடலாம் என்பதை பராதீய ஜனதா புரிந்து கொண்டுள்ளது என்பதனால்தான் தற்போதைய அயோத்திப் பேரணியை நடத்துவதற்கு ஆதரவு வழங்குவதில் தாமதம் காட்டவில்லை.

அதனால்தான் அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவோம். அதனை யாராலும் தடுக்க முடியாது என்று விஸ்வ ஹிந்து பரிஷத்தின் தலைவர்களும் தொண்டர்களும் உத்தரப்பிரதேசத்தை இன்றைய நிலையில் முற்றுகையிடுகின்றனர்.

ஆனால், இதனை ஆதரிக்க முற்படும் பாரதீய ஜனதாவுக்கு தற்போது புதிய சிக்கல்கள் உருவாகியுள்ளன.

உத்தரப் பிரதேசத்தில் முன்பு முதலமைச்சராக இருந்தவர் பாரதீய ஜனதாவின் கூட்டணிக் கட்சியான பகுஜன் சமாஜ் கட்சியின் கையில் முதலமைச்சர் பதவியில் இருந்தது.

எனவே, அயோத்தியில் விஸ்வ ஹிந்து பரிஷத்தும், பாரதீய ஜனதாவும் தாம் நினைத்தபோது ஆர்ப்பாட்டம் நடத்தவும் பேரணிகள் நடத்தவும் இலகுவாக இருந்தது.

இன்று அந்த நிலை மாறிவிட்டது. பகுஜன் சமாஜ் கட்சி முதலமைச்சர் மாயாவதி பதவி கவிழ்க்கப்பட்டு, அங்கு சமாஜ்வாதிக் கட்சித் தலைவர் முலாயம்சிங் யாதேவ் முதலமைச்சராக பதவி வகிக்கின்றார்.

இவர் காங்கிரஸை ஆதரிப்பதில்தான் தற்போது ஆர்வம் காட்டுகின்றார்.

அதாவது, மத சார்பற்ற கொள்கையைப் பின்பற்றி நிற்கப்போகும் முலாயம் சிங் மத சார்புக் கொள்கைக்கு வழி விடுவார் என்று கூறமுடியாது என்பதுடன் அவர் வழி விடுவதாகவும் இல்லை என்பதை அண்மைய நிகழ்வுகள் சுட்டுகின்றன.

அயோத்தியில் நிறைந்துள்ள விஸ்வ ஹிந்து பரிஷத் முக்கிய தலைவர்கள் உட்பட தொண்டர்கள் பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் அங்கு பொலிசாரினால் கைது செய்யப் பட்டுள்ளார்கள்.

அத்துடன் அங்கு பேருந்து போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. புகையிரதப் போக்குவரத்துக்கள் வேறு திசையில் திசை திருப்பி அனுப்பப்படுகின்றன.

இதனால்தான், பிரதமர், துணைப் பிரதமர் உட்பட பாரதீய ஜனதா கட்சியும் பேரணிகள் அமைதியான முறையில் நடைபெற அனுமதிக்குமாறு முலாயம் சிங்கிடம் கேட்டுள்ளனர்.

ஆனால், உத்தரப் பிரதேசத்திற்குள் பிரவேசிக்கும் தொண்டர்கள் கலவரத்தை மூட்டிவிடுவார்கள் என அவர்களைத் தடை செய்வதில்தான் முலாயம்சிங் முனைப்புக் காட்டுகின்றார் எனலாம்.

ஏற்கனவே, உத்தரப் பிரதேசத்தை இழந்துள்ள பாரதீய ஜனதா, வடமாநிலங்களை தமது வசம் கொள்ள அயோத்தியைத் தான் துணையாக நாடியுள்ளது என்பதற்கு அயோத்திப் பேரணிக்கான அதன் ஆதரவு எடுத்தியம்பத் தவறவில்லை.

ஆனால், அயோத்தியில் விஸ்வ ஹிந்து பரிஷத்தும், ஆர். எஸ்.எஸ். அமைப்பும் நினைத்தபடி பேரணியை நேற்று முன்தினம் நினைத்த மாதிரி நடத்த முடியவில்லை

ஏனெனில், விஸ்வ ஹிந்து பரிஷத்தின் செயல் தலைவர் அசோக் சிங்வால் கைது செய்யப்பட்டதுடன் பேரணியில் கலந்து கொள்வதற்காக அயோத்திக்குள் வரும் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இதனால், விஸ்வ ஹிந்து பரிசட், ஆர். எஸ்.எஸ். அமைப்பு எண்ணிய மாதிரி பேரணி மிகப் பெரியளவில் நடத்த முடியவில்லை என்பதைவிட சிறியளவில்கூட நடத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது.

அது மட்டுமன்றி உத்தரப் பிரதேசப் பொலிசார் தடியடி, கண்ணீர்ப் புகைக் குண்டு என்பவற்றைப் பாவித்துப் பேரணிக்கு திரள முற்பட்ட தொண்டர்களை கலையச் செய்துள்ளார்கள். இதனால் பேரணி முற்றுமுழுதாக தடை செய்யப்பட்டதாக கூற முடியும்.



இந்தப் பேரணி மூலம் விஸ்வ ஹிந்து பரிஷத், ஆர். எஸ்.எஸ். அமைப்புக்களை பாரதீய ஜனதா தன்வசம் கவர எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை என்றே கூறலாம்.

அதேநேரம், விஸ்வ ஹிந்து பரிஷத் உட்பட அனைத்து இந்து அமைப்புக்களும் பேரணி நடத்தப்படவில்லை எனும் கோபத்தை மத்தியரசிடம் திருப்பலாம். இதனால், பாரதீய ஜனதா கட்சி சிக்கலுக்கு கூட முகம் கொடுக்க நேரிடலாம்.

அதேநேரம், மிதமான இந்துத்துவாவை ஆதரிப்பதில் தவறில்லை என காங்கிரஸின் மூத்த உறுப்பினர்கள் கூறியுள்ளார்கள்.

இதை நிரூபிக்கும் வகையில்தான் கடந்த யூலையில் ராஜஸ்தானில் இளைஞர்களுக்கு காங்கிரஸ் கோடாரி வழங்கியதோ தெரியவில்லை.

எனவே, இந்துத்துவா என்பதோ மத சார்புக் கொள்கை என்பதோ எமக்கு மட்டும் தான் என பாரதீய ஜனதா எண்ணியிருந்ததை காங்கிரஸ் தகர்க்கத் தொடங்கிவிட்டது எனலாம்.

அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதா... அல்லது இல்லையா... என்பதை மட்டும் தான் காங்கிரஸ் கையிலெடுக்கவில்லையே தவிர ஏனைய மத சார்பின்மை எனும் தமது மகுடத்தில் இந்துத்துவா எனும் வைரத்தைப் பதிக்கத் தவறவில்லை எனலாம்.

மத்திய பிரதேசத்திலும் ஆளும் காங்கிரஸ், பாரதீய ஜனதாவின் மத சார்பை ஓரம் கட்டி விடும் வகையில்தான் இந்துக் கோயில் களைத் தூய்மைப்படுத்துவதாக செயற்படுகின்றது.

இதனால், அயோத்தியில் பேரணி நடத்த முடியாத விஸ்வ ஹிந்து பரிஷத் பாரதீய ஜனதாவை ஆதரிக்க முற்படுமா? என்பது கேள்விக்குரியதொன்று.

அதனால், பாரதீய ஜனதா புதிய வியூகங்களைக் கைக்கொண்டு வட மாநிலங்களை தன்வசம் கொள்ளுவது என்பதை காங்கிரஸின் வடமாநிலத் தேர்தல் வியூகங்கள் தான் நிச்சயம் நிர்ணயிக்கப்போகின்றது என்பதே உண்மையாகும்.

**அ. கலைவாணி**

# 2004 புத்தாண்டில் புதிய ஆட்சி அமையும் எவராலும் இதனைத் தடுத்துவிட முடியாது

## சிறிலங்கா சனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

**புத்தாண்டில் புதிய ஆட்சி அமைவதை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. இதற்கு தயாராகும் விதத்தில் மாவட்ட மட்டத்திலிருந்து நடவடிக்கைகளை ஆரம்:பிக்குமாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது கட்சி அமைப்பாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.**

சனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திர கட்சி மாவட்ட அமைப்பாளர்களுடனான விசேட சந்திப்பொன்றின் போதேஅவர்இதனைக் கூறியுள்ளார். இச்சந்திப்பு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போது அனுராபண்டாரநாயக்க, சரத்அமுனுகம ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

சனாதிபதி தொடர்ந்து கூறுகையில்;

நாட்டு மக்களுக்கு ஆட்சி மாற்றம் தேவை என்பதை நான் உணர்கின்றேன். நாட்டின் தலைவி என்ற வகையில் மக்களின் தேவைகளை நான் நன்கு அறிந்து வைத்துள்ளேன். நாட்டுக்குத் தேவையான ஆட்சி வழங்கும் வகையிலான ஆட்சி மாற்றம் ஒன்று இடம்பெறும். பொதுத் தேர்தலின் மூலம் எவர் புதிய ஆட்சி அமைத்தாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் இப்பொழுது மக்கள் தேர்தலை விரும்பவில்லை. ஆட்களைத் திரட்டி பாதயாத்திரை சென்று என்னை எவரும் பயமுறுத்த முடியாது. நான் இந்த மிரட்டல்களுக்கு பயப்படுபவள் அல்ல. நாட்டு மக்களின் நலனை உறுதிசெய்யும் ஆட்சி மாற்றமே இப்போது தேவையென சனாதிபதி மேலும் கூறியுள்ளார்



## அஞ்சல் ஓட்டவீரர் கைது!

சிறிலங்காவின் 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்ட தேசிய வீரர் ரொஹான் பிரதீப் குமார கைது செய்யப்பட்டுள்ளார். கடன் அட்டையை **(Credit Card)** பயன்படுத்தி துஷ்பிரயோகங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். இவர் பயன்படுத்திய கடன் அட்டையின் இலக்கம் அந்த கடன் அட்டையை விநியோகித்த வங்கியின் இலக்கத்துடன் பொருந்தாமையை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (32)

## நிறுவை, அளவை உபகரணங்கள் முல்லையில் முத்திரையிடல்

வவுனியா மாவட்ட செயலகத்தைச் சேர்ந்த அளவீட்டுச் சேவைகள்னதும், உபகரணங்களினதும் பரிசோதகர் பா.இராசேஸ்வரன் இம்மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பும் இயந்திரங்களையும், உபகரணங்களையும் பரிசோதனை செய்து முத்திரையிடுவதற்காக இம்மாவட்டத்திற்கு வருகைதந்து பின்வரும் அட்டவணைக்கு இணங்க சேவையாற்றவுள்ளார். ப.நோ.கூ.சங்கங்கள், வர்த்தகர்கள் இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தங்கள் அளவைகளுக்கு முத்திரையைப் பொறித்துக் கொள்ளவும்.

நாளை 20ஆம் திகதி கரைதுறைப்பற்று உதவிஅரச அதிபர் பிரிவு கரைதுறைப்பற்று பல.நோ.கூ.சங்கத்தில், 21ஆம் திகதி புதுக்குடியிருப்பு உதவிஅரச அதிபர் பிரிவு- புதுக்குடியிருப்பு பல.நோ.கூ. சங்கத்தில், 22ஆம் திகதி புதுக்குடியிருப்பு உதவிஅரச அதிபர் பிரிவு- விசுவமடு விவசாயிகள் பல.நோ.கூ. சங்கத்தில், 23ஆம் திகதி ஒட்டுசுட்டான் உதவிஅரச அதிபர் பிரிவு - முத்துஐயன்கட்டு பல.நோ.கூ சங்கத்தில், 24ஆம் திகதி துணுக்காய் உதவிஅரச அதிபர் பிரிவு- துணுக்காய் பல.நோ.கூ.சங்கத்தில், 25ஆம் திகதி மாந்தை கிழக்கு உதவிஅரச அதிபர் பிரிவு- பனங்காமம்பற்று பல.நோ.கூ.சங்கத்திலும் முத்திரைகளை இட்டுக்கொள்ளுமாறு முல்லை மாவட்ட அரசஅதிபர் கேட்டுக்கொள்கின்றார்.

## கமக்கார அமைப்புகளுடனான சந்திப்பில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்வு

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்திற்கு உட்பட்ட கமக்கார அமைப்புக்களை ஒன்றிணைத்து துணுக்காய் கமநல சேவைநிலையத்தில் கடந்த வெள்ளியன்று சங்கம நிகழ்வு இடம் பெற்றது.

இதில் தலைமை உரையினை த.பொ.மே.நி.துணுக்காய்ப் பிரதேச இணைப்பாளர் ரஜிகுமார் நிகழ்த்தினார். தொடர்ந்து பிரதேச இணைப்பாளர் அமலன் விவசாய விலங்கு வேளாண்மை கடன் திட்டங்கள், சேமிப்பு நடைமுறைகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிய கருத்துக்களை வழங்கினார்.

தொடர்ந்து பிரதேச அரசியல் துறையைச் சேர்ந்த தனம் 2003ஆம் ஆண்டு மாவீரர்தினம் தொடர் பான வேலைத்திட்டங்கள் மக்கள் மத்தியில் அன்றைய நாள் தொடர்பான விழிப்புணர்வுகளை செயற்படுத்துதல் இதுவரைகாலமும் நடைபெற்றதை விட இம்முறை மிகவும் நேர்த்தியாகவும் சிறப்பான முறையிலும் கொண்டாடப்படுதல் வேண்டும். எனவும் கருத்துரை வழங்கினார்.

தொடர்ந்து பாண்டியன்குளம் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் நிர்வாக நடைமுறைகள் மக்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வழிகள், துறைசார் அமைப்புக்கள் இணைந்து செயற்படுதல் போன்ற பல கருத்துக்களை வழங்கினார். மற்றும் இன்றைய நிகழ்வில் பொருண்மிய பிரதிநிதிகள் கிராமஅலுவலர்கள் எனப்பலர் கலந்து சிறப்பித்தனர். (24)

## பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மூலமாக ரணில் அரசை வீட்டுக்கு அனுப்புவது உறுதி

### -எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ-

(கொழும்பு)

நாட்டை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்லும் இந்த அரசை வீட்டுக்கு அனுப்ப எதிர்வரும் 24ஆம் திகதி அதற்கெதிராக மக்களை ஒன்று திரட்டி கொழும்புக்கு அழைத்து வந்து ஆர்ப்பாட்டம் நடத்த தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கடந்த 13ம் திகதி கேகாலையில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ராஜபக்ச மேலும் கூறியிருப்பதாவது,

இந் நாட்டு மக்கள் அரசைக் கலைக்கும் நோக்கில் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டம் செய்வதாகவும் அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாகவும். இலங்கை போக்குவரத்து சபையை மூடியுள்ளதாகவும் சனாதிபதி அரச ஊழியரின் சம்பளத்தை அதிகரித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தில் சுமார் 4 ஆயிரம் பேர் வேலையிழந்திருப்பதாகவும் இதிலிருந்து இவ்வரசு வீடு செல்வது உறுதியாகி விட்டதாகவும் கூறிய அவர், மக்களினதும் சனாதிபதியினதும் அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிர்வரும்24ஆம் திகதி பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தி ரணில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவது உறுதி எனவும் சபதமிட்டுள்ளார்.

## கிராம சேவகர் பிரிவுகளில் முதியோர் சங்கங்கள்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சகல கிராம சேவகர் பகுதியிலும் முதியோர் சங்கம் ஆரம்பிப்பதற்கு மக்கள் தொடர்பாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஓய்வுபெற்ற அரச திணைக்கள ஊழியர்கள் இதில் இடம் பெற உள்ளார்கள். அரசாங்கத்தினால் இந்தச் சங்கத்திற்கு நிதி உதவிகள் வழங்கப்பட உள்ளது. இந்த நிதி கிராம முன்னேற்றத்திற்கு பயன்படுத்துவதற்கு சங்கத்திற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது. 55வயது அல்லது 60வயது கடந்தாலும் சில ஓய்வுபெற்றவர்கள் நல்ல திடகாத்திரமாக உள்ளனர். இவர்களின் சேவையைப்பெற்று கிராமத்தை முன்னேற்றுவதற்கு மக்கள் தொடர்பாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.



ராகமயில் ரயில் கடவை அருகில் கடந்த 16ஆம் திகதி நடந்த கோரவிபத்தில் 50 மீற்றர் தூரத்துக்கு தூக்கியெறியப்பட்ட வான் இச்சம்பவத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். சாரதி பலத்தகாயங்களுடன் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பொலிசாருக்கு எதிரான இரு வழக்குகளில் இழப்பீடு வழங்க நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் பொலிசாருக்கு எதிரான இரண்டு வழக்குகளில் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்போது மூன்று இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவை பொலிசார் மனுதாரரிற்கு வழங்க வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கலவான பகுதியில் உணவகம் ஒன்றில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை தொடர்பில் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை பொலிசார் மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதே வேளை தம்புள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிரான வழக்கு ஒன்றிலும் அவர் 70ஆயிரம் ரூபாவை மனுதாரருக்கு செலுத்தவேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (32)

## மத்துகமவிற்கு மாற்றம்

இரத்மலான விமான நிலையத்தை மத்துகம பிரதேசத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாகவும் சுமார் 7100ஹெக்ரேயர் நிலத்தில் மேற்படி வேலைகள் ஆரம்பமாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## அத்துமீறி மீன்பிடித்த 41 இந்திய மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன் பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் மாலை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இந்திய கடலோரக் காவல் படையினிடம் ஒப்படைக்கப்பட்டு மண்டபம் பகுதிக்குச் சென்றடைந்துள்ளனர்.

## குற்றச்செயல்களில் ஈடுபட்ட ஐவர் ஆயுதங்களுடன் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான ஆயுதங்களையும் 2 கிரனைட் குண்டுகளையும் வைத்திருந்த 5 பேரை களனி பொலிசார் கைது செய்துள்ளனர். களனி பொலிஸ் பொறுப்பதிகாரி லால் உடுகம தலைமையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சோமபாலவின் உத்தரவின் பேரில் சென்ற குழுவினர் மேற்படி ஆயுதங்களையும் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

விசாரணைகளின் மூலம் அவர்களில் ஒருவர் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர், மற்றும் ஒருவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி 1996 ஆம் ஆண்டில் பதவி நீக்கம் செய்யப்பட்டவராவார் ஏனையோரில் ஒருவர் பல கொலை, கொள்ளைச் சம்பவங்களோடு தொடர்புடையவரும் பொலிசாரினால் தேடப்பட்டு வந்த வருமான பெரோஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## வன்னி வங்கிகளில் திரவப் பணம் பற்றாக்குறை

வன்னியில் இயங்கிவரும் அரசாங்க வங்கிகளில் திரவப்பணத் திற்குத் தட்டுப்பாடு நிலவிவருவதாக வங்கி வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தட்டுப்பாடு குறித்து கிளிநொச்சி செயலகத்தில் இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது வன்னியில் நிலவும் சிறியளவிலான திரவப் பணத்தட்டுப்பாட்டை விரைவில் நீக்க தலைமைப் பீடத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாகக் கூட்டத்தில் கலந்துகொண்ட வங்கிப் பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

## மது போதையில் வீடு வந்தவர் வாழைகளை வெட்டிச் சாய்த்தார்

மது போதையில் நள்ளிரவு வீடு வந்தவர் தனது தோட்டத்தில் இருந்த வாழைகள் அனைத்தையும் வெட்டிச் சாய்த்தார். இந்தச் சம்பவம் கடந்த திங்களன்று இடம்பெற்றது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: வட்டக்கச்சி சில்வா வீதியிலுள்ள. மேற்படி நபர் நன்கு குடித்து விட்டு நிறைபோதையில் வீடு வந்தவர் குடும்பத் தகராரின் காரணமாக நள்ளிரவு 12 மணியளவில் தனது தோட்டத்தில்இருந்த அனைத்து வாழைகளையும் வெட்டிச் சாய்த்தார்.

தனது கோபத்தை தான் வளர்த்த வாழைகளில் காண்பித்த மேற்படி நபரின் செயல்குறித்து இப்பகுதியில் பரபரப்பாகப் பேசப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# வாழ்க்கைச் செலவிற்கேற்ப சம்பள உயர்வு புதிய திட்டம் குறித்து அரசு ஆலோசனை

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒரு முறை வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ப சம்பள உயர்வு வழங்கும் திட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டுமென அமைச்சரவை கூட்டத்திற்கு முன்னர் அமைச்சர்களுடன் உரையாடிய பிரதமர் ரணில் கூறியுள்ளார்.

இவ் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு தொடர்பான விடயங்களை ஆராய நிரந்தர சம்பள நிர்ணய ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும் என சக்தி மின்சக்தி அமைச்சர் கருஜயசூரிய யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார். நிரந்தர சம்பள நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டால் அடிக்கடி சம்பள உயர்வு வழங்கவேண்டிய நிலை ஏற்படும் என கல்வியமைச்சர் கூறியுள்ளார். அரச ஊழியர்கள் மத்தியில் சம்பள முரண்பாட்டை நீக்க சம்பள முரண்பாட்டு ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென காணியமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

# சகல பிரதேச சபைகளுக்கும் நான்கு மாதங்களில் தேர்தல்

## - சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

இலங்கையில் சகல பிரதேச சபைகளையும் கலைத்துவிட்டு ஒரே தினத்தில் பிரதேச சபைத் தேர்தல் நடைபெறும்என சனாதிபதி செயலகத்தில் நடந்த பொதுசன ஐக்கிய முன்னணி கூட்டத்தில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். இன்னும் நான்கு மாத காலத்தில் பிரதேச சபைத் தேர்தல் நடைபெறும். இதில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த சகல பிரதேசஅமைப்பாளர்களும் வெற்றி பெறுவதற்குப் பாடுபடவேண்டும் என சனாதிபதி அறிவித்துள்ளார்.


## தொழிற்பயிற்சி நெறி

# விண்ணப்பம் கோரல்

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவன தலைமைத்துவப் பணிமனையும், ஆசிய ஜப்பானிய உறவுப்பால தொண்டர் நிறுவனமும் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் நடாத்தவுள்ள பின்வரும் பயிற்சி நெறிகளுக்குப் பொருத்தமான இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

## பயிற்சி நெறிகள்:-

| | |
|---|---|
| ✦ மேசன் வேலைப் பயிற்சி | (3 மாத காலம்) |
| ✦ தச்சுவேலைப் பயிற்சி | (3 மாத காலம்) |
| ✦ உழவு இயந்திர திருத்தம் | (3 மாத காலம்) |

## தகைமைகள்:-

- 17 – 29 வயதுக்குட்பட்டவராக இருத்தல்
- ஆண்டு 10 வரை கல்வி கற்றவராக இருத்தல்

## பயிற்சியின் பலன்கள்:-

- தொழில்சார் பயிற்சிச் சான்றிதழ்.
- சுயதொழில் முயற்சிக்கான தகுதி.
- பயிற்சி நெறியினை முழுமையாக நிறைவு செய்பவர்களுக்கு திருத்த வேலைக்குரிய உபகரணத் தொகுதிகள் வழங்கல்.
- பயிற்சியின்போது உதவு தொகை வழங்கப்படும்.

## விண்ணப்ப முடிவுத் திகதி 25-10-2003

விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ளும் இடம்

இணைப்பாளர்,
கிராமிய பொருளாதார, கல்வி, ஆய்வு
அபிவிருத்தி நிறுவனதலைமைப் பணிமனை,
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

பயிற்சி முகாமையாளர்,
BAJ, கணேசபுரம், கிளிநொச்சி.

குறிப்பு: பயிற்சி பெற விரும்புபவர்கள், பயிற்சிக்கான விண்ணப்பங்களை சுய விபரங்களுடன் தயாரித்து தபாலிலோ அல்லது நேரிலோ மேற்படி முகவரிகளில் ஒன்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

(3106)


# தேசிய அடையாள அட்டைகளை இலகு முறையில் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை வழங்கும் நடைமுறை நாட்டு மக்களின் நலன் கருதி மேலும் இலகுவாக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சின் செயலாளர் ஜே.என் ஜூனைட்டின்ஆலோசனையின் அடிப்படையில் மலையக மக்கள் உட்பட சகல மக்களும் பயன்பெறும் நோக்கில் இந்நடைமுறை இலகுவாக்கப்பட்டுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் இம் மாதத்திற்குள் வெளியிடப்படுமென ஆட்பதிவு திணைக் களத்தின் ஆணையாளர் விஜயரண சிங்க கூறியுள்ளார். இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அடையாள அட்டையைப் பெறுவது தொடர்பாக முன்பிருந்த நடைமுறைப்படி கிராமசேவகர் மூலம் மட்டுமே விண்ணப்பப் படிவத்தைஅத்தாட்சிப்படுத்த முடியும் ஆனால் இனி புகைப்படத்துடன் பூர்த்தி செய்து சட்டத்தரணிகள், நீதிபதிகள், டாக்டர்கள், என்ஜினியர்கள், மிருகவைத்தியர்கள் மற்றும் அரசதிணைக்கள உயர்அதிகாரிகள் பொலிஸ் முப்படைச் சேவை உயரதிகாரிகள் போன்றோர் அத்தாட்சிப்படுத்தி விண்ணப்பப்படிவத்தை ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு சுயவிலாசமிட்டு அனுப்பி சுமார் 04 வாரங்களில் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்.ஒரே நாளில் பெறவிரும்புவோர் 500 ரூபா செலுத்தி நேரடியாகவே பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# பிரதேச குறியீடுகளில் மாற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிக்கொம் கொழும்பு, கண்டி, காலி ஆகிய இடங்களுக்கான பிரதேசக் குறியீடுகளை நேற்று தொடக்கம் மாற்றி அமைத்துள்ளது.

இதன்படி இந்த மூன்று இடங்களுக்குமான பிரதேசக் குறியீடுகளில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

புதிய திட்டத்துக்கு அமைய கொழும்பின் பிரதேச குறியீடு 01இல்இருந்து011 ஆகவும், கண்டியின் பிரதேச குறியீடு 08இல் இருந்து 081 ஆகவும், காலியின் பிரதேச குறியீடு 09இல் இருந்து 091 ஆகவும் மாற்றப்பட்டுள்ளது.

# இளைஞர் விவசாயக்கழகம் உருத்திரபுரம் ம.வி.யில் ஆரம்பம்

(கிளிநொச்சி)

உலக உணவு தினமான கடந்த வியாழனன்று உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் உணவு தயாரிப்பும், பாதுகாப்பும் பற்றிய விளக்கப் பயிற்சி ஒன்று நடைபெற்றுள்ளது.

உருத்திரபுரம் விவசாய போதனாசிரியர் க.கணேசலிங்கத்தின் நெறிப்படுத்தலில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறியில் அதிபர், ஆசிரியர்கள் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கினர்.

இந் நிகழ்வில் ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

அன்றைய தினம் குருகுலபிதா அப்புச்சி இளைஞர் விவசாயக் கழகமும் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.




## புதுக்குடியிருப்பு-குமுழமுனை பேருந்துப் பணி, புதுக்குடியிருப்பு-குமுழமுனை- தாமரைக்கேணி

# பணியாக மாற்றம்



மேற்படி பேருந்துப் பணி 20-10-2003ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் புதுக்குடியிருப்பிலிருந்து தொடங்கி குமுழமுனை, தாமரைக்கேணி வழித்தடத்தில் நடைபெறும் என்பதை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

## நேர ஒழுங்கு:

### புதுக்குடியிருப்பு - தாமரைக்கேணி

| புதுக்குடியிருப்பு | வற்றாப்பளை | முள்ளியவளை | காட்டாவிநாயகர்சந்தி | கணுக்கேணி | குமுழமுனை | தாமரைக்கேணி |
|---|---|---|---|---|---|---|
| பகல் 02.30 | 03.15 | 03.30 | 3.35 | 03.45 | 04.15 | 04.30 |

### தாமரைக்கேணி - புதுக்குடியிருப்பு

| தாமரைக்கேணி | குமுழமுனை | கணுக்கேணி | காட்டாவிநாயகர் சந்தி | முள்ளியவளை | வற்றாப்பளை | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|
| காலை 07.15 | 07.30 | 08.00 | 08.10 | 08.15 | 08.30 | 09.15 |

முகாமையாளர்,
மாணியார் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி-8660)



## சிந்தனைக்கு

எந்தவொரு விடுதலை இயக்கமும் தனியாக நின்று, மக்களுக்குப் புறம்பாக நின்று, விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. அது நடைமுறைச் சாத்தியமான காரியமுமல்ல.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 19-10-2003

# பயனற்றதான பயணம்!

கனடாவின் வெளிவிவகார அமைச்சரின் யாழ்.விஜயம் ஒரு புறத்தில் அர்த்தம் அற்றது என்பது போன்றும் இன்னொரு புறத்தில் சந்தேகங்களையும், அவநம்பிக்கைகளையும் ஏற்படுத்துவது போன்றதுமாகியுள்ளது. ஏனெனில் யாழ்.சென்ற கனடா வெளிவிவகார அமைச்சரின் நிகழ்ச்சி நிரலானது பயன் தரத்தக்க ஒன்றாகவோ ஆக்கபூர்வமானதாகவோ இருக்கவில்லை என்பது அரசியல்நோக்கர்களின் அபிப்பிராயமாகும்.

இவ்வாறானதொரு அபிப்பிராயம் உருவானமைக்கு கனேடிய வெளிவிவகார அமைச்சர் அரச தரப்பை அதிலும் குறிப்பாக இராணுவத்துடனான சந்திப்பிற்கு முக்கியத்துவமளித்தமையே காரணமாகும். அதாவது தமிழ் மக்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் எதையும் அவரது விஜயம் ஏற்படுத்திக்கொண்டதாக இருக்கவில்லை.

கனடாவின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு சிறிலங்கா அரசின் விருந்தாளியாக விஜயம் செய்திருக்கலாம். இதனால் அரச தரப்புடன் மட்டும் தனது நிகழ்ச்சி நிரலைஇட்டிருக்கலாம். ஆனால், யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்யின் அங்குள்ள மக்களினதும், பொது அமைப்புக்களினதும் உணர்வுகளை அவர்கள் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும். அரச விருந்தாளி என்ற நிலையுடன் மட்டும் பயணத்தை முடித்துக்கொள்வதாயின் கொழும்புடனோ அன்றிக் கண்டியுடனோ அன்றி அநுராதபுரத்துடனோ மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

யாழ்.அரச அதிபர், அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையம் மற்றும் பொது அமைப்புக்கள் என்பனவற்றிற்கு கனேடிய தூதுவராலயத்தில் இருந்து உரிய முறையில் அழைப்புக்கள் அனுப்பப்படாமையே இச்சந்திப்புக்கள் இடம்பெற முடியாமைக்குக் காரணம் எனக்கூறப்படுகின்றது. இதனைப் பார்க்கையில் கனேடிய தூதுவராலயம் இச்சந்திப்புக்களில் பெரும் அக்கறை கொண்டிருக்கவில்லை என்ற முடிவிற்கே வரவேண்டியுள்ளது. கனேடிய தூதுவரின் பயண ஏற்பாடுகளைக் கவனிப்பவராக இருந்த ஒரு இலங்கைத்தமிழரினால் உத்தியோகபற்றற்ற முறையில் பொது அமைப்புக்களுக்கு சந்திப்பிறகான அழைப்புக்கள் விடுக்கப்பட்டதாயினும் – இதனை உத்தியோகபூர்வ அழைப்பாகக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர் தயாராக இருக்கவில்லை. ஆனால் இவ்விடயத்தில் கனேடிய தூதுவராலயம் அக்கறையுடன் செயற்பட்டதாகத் தெரியவரவில்லை.

இவ்வாறு கனேடிய அரசு தமிழ் மக்களைப் புறம் தள்ளியமையானது அதன் வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயத்திற்கான நோக்கம் குறித்து அதிருப்தி கொள்ள வைக்கின்றது. ஏனெனில் இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமாதான வழிமுறையில் அரசியற் தீர்வொன்று காணமுடியும் என்ற கனடாவின் நிலைப்பாட்டிற்கு இத்தகைய அணுகுமுறை பொருத்தப்பாடானதாக இல்லை.

அத்தோடு தமிழர் தரப்புடனான சந்திப்புக்கள் இடம்பெற முடியாமற் போனமையால் கனேடிய வெளிவிவகார அமைச்சரின் யாழ்.விஜயமானது அர்த்தமற்றதொன்றாகி உள்ளதெனலாம். ஏனெனில் தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கையை அறிவதற்கான சந்தர்ப்பத்தை கனேடிய வெளிவிவகார அமைச்சர் தவறவிட்டுள்ளார் என்றே கூறுதல் முடியும்.

இதேவேளை, கனேடிய அமைச்சரின் விஜயத்தில் சிறிலங்கா அரசு செலுத்திய செல்வாக்கே இத்தகைய சந்திப்புக்கள் இடம்பெறாமல் போனமைக்குக் காரணமாக இருந்திருப்பின் கனடா அரசை சிறிலங்கா அரசு தவறான வழியில் வழிநடத்த முற்பட்டுள்ளது என்றே கொள்ளவேண்டியதாக இருக்கும். ஆனால் அவ்வாறு நடந்திருப்பின் கனடா இவ்விடயத்தில் விழிப்புடன் செயல்ஆற்றி இருத்தல்வேண்டும்.

காரணம் எதுவாகிலும் கனடா வெளிவிவகார அமைச்சர் குடாநாட்டில் இராணுவத்தினருடனான சந்திப்பிற்கு அளித்த முக்கியத்துவமானது இனப்பிரச்சினையின் ஆழத்தையும் இனமுரண்பாட்டின் கூர்மையையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு இல்லாது போய் விட்டது என்றே கூறலாம். இது இனப்பிரச்சினை குறித்து அவர் புரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தைக்கூட இல்லாது ஒழித்துள்ளது.

இந் நிலையானது கனடா அரசு குறித்து தமிழ் மக்கள் கொண்டிருந்த நல்லபிப்பிராயத்திற்கு ஓரளவு ஊறுவிளைவிக்கும் ஒன்றாகியுள்ளது எனலாம். கனேடிய வெளிவிவகார அமைச்சர் சிறிலங்கா அரசின் விருந்தினராகஇருக்கையில் தமிழர் தரப்புடன் சந்திப்புக்கள், பேச்சுக்களை நடத்துவது தவறு அன்றித் பொருத்தப்பாடற்றது என அவர் கருதிஇருப்பின் இவ்விஜயத்தின் போது இனப்பிரச்சினை தொடர்பாகக் கருத்துக்களையும் தவிர்த்துக்கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு நடந்து கொண்டதாகஇல்லை. உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடைக்கால நிர்வாக கட்டமைப்புக்கள் வரை அபிப்பிராயம் வெளியிடுபவராகவே அவர் இருந்துள்ளார்.

### சமாதான முயற்சிகள் தொடர்பாக

# சனாதிபதி பிரதமரை தலதா மாளிகைக்கு அழைத்துப் பேச மகாநாயக்கர்கள் முடிவு

(கொழும்பு)

இனப்பிரச்சனைத் தீர்வில் சமாதானத்தை ஏற்படுத்தி ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப்பரவலாக்களை வழங்கும் நிலையில் நாட்டின் சகல இனங்களினதும் பொதுவான உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் எனக்கோரி பிரதமரிடமும், சனாதிபதியிடமும் மகஜர் மூலம் கேட்கப்போவதாக அஸ்கிரிய-மல்வத்த பீடாதிபதிகள் தீர்மானித்துள்ளனர்.

இதற்கான மகஜர் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இரு தலைவர்களையும் கண்டி-தலதாமாளிகைக்கு வரவழைத்து மேற்படி மகஜர் கையளிக்கப்படவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இவ்விரு பீடங்களும் இனப்பிரச்சினைத் தீர்வில் இதுவரையும் ஒன்றுக் கொன்று முரண்பாடான கருத்துக்க ளைக் கொண்டிருந்தன. இவை தற்போது மேற்படி ஒருங்கிணைந்த கோரிக்கையை பிரதமரிடமும் சனாதிபதியடமும் முன்வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சனாதிபதியும் பிரதமரும் இது வரை காலமும் எடுத்து வந்துள்ள நடவடிக்கைகளுக்கு பலதரபபட்ட எதிர்ப்புக்கள் தோன்றியுள்ளன. இவற்றை வெற்றிகண்டு நிலவும் யுத்த நிறுத்த காலத்துள் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த மகாசங்கங்களின் ஆலோசனைகளையும் வழங்குவதாக மேற்படி சங்க நாயக்கர்கள் முடிவு எடுத்துள்ளனர்.

# இலங்கையின் சமாதான முயற்சிகளை முதலீட்டாளர் உன்னிப்பாக அவதானிப்பு

(கொழும்பு)

சர்வதேச முதலீட்டாளர்கள் இலங்கையின் சமாதான முயற்சியைக் கண்காணித்து வருகின்றார்கள்! என்று சிங்கப்பூரில் உள்ள வர்த்தக சங்கத் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக சங்க வருடாந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு முக்கிய உரை நிகழ்த்திய அவர் தெற்காசியாவின் பொருளாதார கேந்திரஸ் தானமாக இலங்கையை கணிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் 25 வருட கால அனுபவத்தைக் கொண்டுள்ள அவர் இலங்கை நாட்டை அபிவிருத்தி செய்வதா அல்லது வீழ்ச்சிக்கு இட்டுச் செல்வதா என்பதைத் தீர்மானிக்கும் நிலையில் இப்போது இருப்பதாகக் கூறினார்.

# நாடு இரண்டாகப் பிரிந்து போவதை அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது

### -பதவியாவில் அமைச்சர் ஜெயலத் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு இரண்டாகப் பிரிவதை அரசு அனுமதிக்காதென அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன கூறியுள்ளார். மணலாறு சிங்களக் குடியேற்ற பிரதேசத்திற்கு விஜயம் செய்த அவர் பதவியா பிரதேசத்தில் வைத்து இதனைக் கூறியுள்ளார். இன்று சர்வதேச அழுத்தமும் ஆதரவும் இருதரப்பிற்கும் உருவாகியுள்ளது. எனவே எவர் எதனைக் கூறினாலும் மீண்டும் யுத்தம் ஏற்படாதென அவர் மேலும கூறியுள்ளார். தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக புலிகள் ஆயுதம் ஏந்தினார்கள். இன்று அவர்கள் பேச்சுவார்த்தை மூலம் பாதிக்கப் பட்ட மக்களுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளனர். எனவே இனவாத கொள்கைகளைக் கொண்ட சில கட்சிகள் இவற்றை மாறுபட்ட வகையில் திருத்திக் கூறுகின்றனர். மக்களை ஒன்று சேர்த்து எதிர்ப் புப் போராட்டங்களை நடத்துவது தனிப்பட்ட கட்சிகளைப் பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கையாகும்.

கடந்த 20 வருட காலமாக இடம் பெற்றுவந்த யுத்தத்தை நிறுத்துவதில் அரசாங்கம் பாரிய சவால்களை எதிர்கொள்கிறதென பல் இரு முனைக கருத்துக்களைக கூறிக்கொள்வதாக அவர் மேலும் கூறியுள்ளார் (32)

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று இந்தியா பயணம்

(கொழும்பு)

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று இந்தியா செல்கின்றார்.

இதன் போது இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் ரணில் விக்கிரமசிங்க சிறிலங்கா-இந்திய கூட்டு ஆணைக்குழு சம்பந்தமாகவும், இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர ஒப்பந்தம் பற்றியும் அவருடன் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

சுதந்திர ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்றுமதிப் பொருட்களுக்குப் பெருமளவு தீர்வை குறைப்பை மேற்கொள்வதுடன் வெளிநாட்டு முதலீடுகளும் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### 2-வது டெஸ்ட் போட்டியில்

# நியூசிலாந்து அணி 6 விக்-630 ஓட்டங்கள்; 1 விக்-203 ஓட்டங்களுடன் இந்தியா களத்தில்!

மொகாலியாவில் இந்திய-நியூசிலாந்து அணிகளுக்கிடையே நடைபெறும் 2 ஆவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் மூன்றாவது நாள் ஆட்ட முடிவின் போது இந்திய அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 203 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்திய அணியின் ஆகாஷ் சோப்ரா 60 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். செவாக் 126 ஓட்டங்களுடனும் ராவிட் 9 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக பூவா தலையா வென்ற நியூசிலாந்து அணி துடுப்பெடுத்தாடி 6 விக்கெட்டுக்களை இழந்து 630 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை நிறுத்திக் கொள்வதாக அறிவித்தது. அவ்வணியில் லோவின்சன்,மாக்றிச்சட்சன் ஸ்கொட் ஸ்டைரிஸ், மக்மிலன் ஆகியோர் சதமடித்தது குறிப்பிடத்தக்கது.

# ஜோண்ரைட்டின்ஆலோசனை!

கிரிக்கெட் போட்டிகளுக்கான ஆடுகளங்களைத் தயாரிக்கும் போது சொந்த அணிக்குச் சாதகமாக உருவாக்க வேண்டும் என கூறுகிறார் இந்திய கிரிக்கெட் பயிற்சியாளர் ஜோண்ரைட்.

அகமதாபாத் டெஸ்ட் போட்டி முடிந்ததும் மோசமான ஆடுகளம் தான் வெற்றியைக் கொடுத்துவிட்டது என்று இந்திய கிரிக்கெட் அணி கப்டன் கங்குலி கூறியதை ஆமோதிக்கும் ஜோண்ரைட் உலகத்தரம் வாய்ந்த அணிக்கும்மே.ஹர்பஜன்சிங், டேனியல் வெட்டோரி ஆகியோர் விக்கெட் எடுக்க முடியாமல் திணறியதைப் பார்க்கும் போது ஆடுகளம் எந்தளவிற்கு மோசமாக இருந்தது என்பதை உணர முடிந்தது.

இது போன்ற ஆடுகளங்களில் விளையாடும் போது எமது பந்து வீச்சாளர்களைக் குறை சொல்லக் கூடாது எமக்குக் கொடுக்கப்படும் ஆடுகளத்தில்த்தானே நாம் விளையாட முடியும் சொந்த மண்ணில் ஆடுவதால் கொஞ்சம் அதிக ஒத்துழைப்பு எதிர்பார்ப்பது இயல்பே எந்த நாடும் இதற்கு விதிவிலக்கல்ல என்றார்.

# இந்திய அணி அறிவிப்பு

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்திய அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள மும்முனைக் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள இந்த போட்டித் தொடரில் டெஸ்ட் துடுப்பாட்ட வீரரான வீ.வீ.எஸ்.லக்ஸ்மன் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

அணிவிபரம், சௌரவ் கங்குலி (அணித்தலைவர்), வீரேந்தர் சேவாக், சச்சின்டெண்டுல்கர், ராகுல்ராவிட், யுவராஜ் சிங், முகமட்கைபப், லக்ஸ்மன், பாத்திவ் பட்டேல், அஜித் அகக்ர், சகீஹான், ஹர்பஜசிங், அனில் கும்ளே, அவிஸ்க சல்வீர் பரனி கார்த்திக் ஆகியோர் அணியில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.



# சிறப்புற நடைபெற்ற வடக்கு-கிழக்கு கூட்டுறவுப் பேராளர் சங்கமம்


(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுப் பேராளர் சங்கமம் நேற்று கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் சிறப்புற நடைபெற்றுள்ளது.

காலை 9.30 மணிக்கு நாதஸ்வர இசையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரை கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து மாவட்ட ரீதியாக கூட்டுறவுக் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டன. வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து மங்கல விளக்கினை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் ஏற்றிவைத்தனர். வரவேற்புரையைத் தொடர்ந்து தலை மையுரையை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இளங்கோவன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து கூட்டுறவாளர்கள் தமது மாவட்டங்களில் கூட்டுறவுத் துறையின் நிலை பற்றியும், அது மேற்கொண்டுவரும் பணிகள் பற்றியும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும், விரிவாக எடுத்துரைத்தனர். தொடர்ந்து மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட சிறுகதை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அடுத்து கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட சங்கமம் கூட்டுறவுகுரல் பத்திரிகையை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் வெளியிட்டு விமர்சன உரையாற்றினார்.

தொடர்ந்து நிகழ்வில் சிறப்புரையை தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ நிர்வாகசேவை துணைப் பொறுப்பாளர் பொ.இளஞ்சேரன், கிளி.மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.மேற்படி சங்கம நிகழ்வில் வட கிழக்கின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த 1000 இற்கும் மேற்பட்ட கூட்டுறவாளர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (லோ, சோ)



# குப்பி விளக்கு சரிந்ததால் ஆடையில் தீப்பற்றியது

## இளம் குடும்பப் பெண் காயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மூன்றாம் வாய்க்கால் பன்னங்கண்டிப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, மூன்றாம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த லோகேஸ்வரன்-உசாநந்தினி (வயது-20) என்பவரே காயமடைந்தவராவார். தவறுதலாகக் குப்பி விளக்குச் சரிந்து வீழ்ந்ததில் நெருப்பு பெண் அணிந்திருந்த ஆடையில் பற்றியது.

இவ்வாறு தன்மீது பற்றிய தீயை அணைக்க முற்பட்ட போது தீ மேலும் பரவியது. பின்னர் அயலவர்களால் தீ அணைக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்ட பெண் தற்போது சிகிச்சைக்காகக் கிளி. மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தீக்காயங்களுக்குள்ளான இப்பெண்மணியின் கணவர் கிளி. பகுதியில் இராணுவம் புதைத்துவிட்டுச் சென்ற மிதிவெடியில் சிக்கித் தனது கால் ஒன்றை முன்னர் இழந்துள்ளமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (லோ)

# அஞ்சல் சேவை ஊழியர்கள் 24மணி நேரப் போராட்டம்

அஞ்சல் சேவை ஊழியர்கள் நாளை 24மணிநேர பணிப்புறக்கணிப்பு ஒன்றில் ஈடுபடவிருக்கின்றனர். ரத்துச் செய்யப்பட்டுள்ள சொத்துக்கள், மீள்வரும் கடன் என்பவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும், வேதனத்தை 50 வீதமாக உயர்த்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இப்போராட்டம் முன்னெடுக்கப்படவிருக்கின்றது. (32)

# மாகாண சபைத் தேர்தலுக்கு வேட்பாளர்கள் தெரிவு

மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவுகளில் பிரதான கட்சிகள் ஈடுபட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி நேற்று மாவட்ட மட்டத்தில் இது தொடர்பான பணிகளை ஆரம்பித்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏற்கனவே வேட்பாளர் தெரிவுகளை நிறைவு செய்துள்ளது. இதற்காக சுமார் 4 ஆயிரம் விண்ணப்பங்கள் கட்சியின் தலைமைக்கு அனுப்பப்பட்டிருந்ததாகக் கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (32)

## உலக உழவர் தின நிகழ்வுகள் இரத்து

கிளிநொச்சியில் நாளை நடைபெறவிருந்த உலக உழவர் தின நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது. தவிர்க்க முடியாத காரணத்தால் இந நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# குரங்குபாஞ்சான் முகாமை அகற்றாவிடின் உடன்பாட்டில் திருத்தம் செய்யவேண்டியிருக்கும்

## சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன

குரங்குபாஞ்சான் தமிழீழ விடுதலைப்புலிகள் முகாம் அகற்றப்படாதவிடத்து நடைமுறையில் இருக்கும் போர்நிறுத்த உடன்பாட்டில் திருத்தங்கள் கொண்டுவர வேண்டியிருக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இது தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குச் செவ்வியளித்துள்ளார்.

குரங்குபாஞ்சான் முகாம் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.

இதனை அகற்றுவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவிக்கவேண்டும். அவ்வாறு இணக்கம் தெரிவிக்காதவிடத்து நடைமுறை போர்நிறுத்த உடன்பாட்டை திருத்தம் செய்ய நேரும். அதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான முகாம் அமைப்புப் பணிகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் எனவும் அமைச்சர் திலக் மாரப்பன குறிப்பிட்டுள்ளார். (32)

# 11 பேருந்துச்சாலைகளை விற்பனை செய்ய முடிவு

இடைநிறுத்தப்பட்டிருந்த மக்கள் போக்குவரத்துச் சபையின் 6 பேருந்துச் சாலைகள் உட்பட 11 பேருந்துச்சாலைகள் மீண்டும் ஏலத்தில் விற்பனை செய்யப்படவிருக்கின்றன. இதற்கான கேள்விப்பத்திரங்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளன. பெரும்பாலும் இந்த கேள்விப்பத்திர வெளியீடு எதிர் வரும் நவம்பர் முதலாம் வாரத்தில் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவை கொழும்பு பங்குச் சந்தையின் மூலம் விற்பனை செய்யப்படுவதற்கான ஏற்பாடுகளை பேர்க் எனப்படும் அபிவிருத்தி ஆணைக்குழு மேற்கொண்டு வருகிறது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் இந் நப் பேருந்துச்சாலைகளை 2 மாதங்களுக்குள் விற்பனை செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி கம்பஹா, கொழும்பு நகரம், களுத்துறை, நியூ ஈஸ்டன், சப்பிரகமுவ, ரஜரட்ட, கண்டி, நுவரேலிய, ஊவா றுகுணு ஆகிய பேருந்து மையங்கள் விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

### போட்டிகள்...

அண்மையில் மேற்படி பாடசாலையில் தீர்மானிக்கப்பட்டிருந்த சுற்றுப் போட்டியை நடத்துவதற்கு அப் பகுதிப் படைத்தளபதியிடம் அனுமதி கோரியதற்கே படைத்தரப்பினர் அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை காரணம் காட்டி இப் பாடசாலை மாணவர்களின் துறைசார் மேம்பாட்டிற்கும் சுதந்திரமான கல்வி கற்றலுக்கும் தடையாகப் படையினர் இருந்து வருவது மாணவர்களின் எதிர்காலத்தை பாதிப்பதாக அமைந்திருப்பதுடன் தமது அனுமதி இன்றி எத்தகைய ஒரு நிகழ்வுகளையும் அப் பாடசாலையில் நடத்தப் படையினர் தடை விதித்திருப்பது குறித்தும் சங்கம் கவலை தெரிவித்துள்ளது. (33)

### அதிரடிப்...

துள்ளன. அதிரடிப்படையினர் பொதுமக்களை அடிமைகளாக நடத்தி அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும். நடந்த சம்பவங்களுக்கு அதிரடிப்படையினர் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

### அமைச்சர்...

டுள்ளன. இன்று அமைச்சர்களான பந்துல்ல குணவர்த்தன மற்றும் காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஆகியோர் சிலாபத்தில் நிகழ்வொன்றில் பங்குகொள்ளவிருந்தனர். இவர்களை இலக்காகக் கொண்டே இப் பிரதேசத்தில் நடமாடியதாக பொலிசார் கூறுகின்றனர். (32)

### முஸ்லிம்...

திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் தலைமையில் இன்றைய சந்திப்பு இடம் பெற்றுள்ளது. அடுத்த கலந்துரையாடல் மார்கழி மாதம் 7ஆம் திகதி நடைபெறுமென தீர்மானிக்கப்பட்டது. (32, 25)

### பொருளாதார...

எல்.வில்டன் தலைமையிலான ஐரோப்பிய ஆணைக்குழு அதிகாரிகள் குழுவினர் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி புனர்வாழ்வுப் பணிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளில் காட்டும் அக்கறை, அரசியல் நடவடிக்கைகள் ஏனைய அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள், முஸ்லிம்களின் பிரச்சினைகள் ஆகியன தொடர்பாக உயர் அதிகாரிகளையும் சமய, சமூகப் பெரியார்களையும் சந்தித்து கருத்துக்களைக் கேட்டறிந்து கொள்வதற்காகவே ஐரோப்பிய அதிகாரிகள் அங்கு சென்றிருந்தனர். இக் குழுவினர் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமியை அவரது வாசஸ்தலத்தில் நேற்றுப் பிற்பகல் சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான முயற்சியில் காட்டிவரும் ஈடுபாடு, இடைக்கால நிர்வாகம் போன்ற விடயங்களைப் பற்றி அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் இதற்கு பதிலளிக்கையில், யுத்தத்தால் வடக்கு-கிழக்குப் பிரதேசம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனை மீளக்கட்டியெழுப்புவதற்கு நிதி மற்றும் அபிவிருத்தி அதிகாரம் கொண்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது அவசியமாகும். பொருளாதார நிர்வாகப் பணிகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் போதிய அனுபவத்தை கொண்டிருக்கிறார்கள். அதனை அவர்கள் செவ்வனே செய்வார்கள் என மக்கள் நம்புகிறார்கள் எனத் தெரிவித்தார்.

முஸ்லிம்களின் உரிமைகளை நிச்சயமாக தமிழீழ விடுதலைப் புலிகள் மதித்து செயற்படுவார்கள். தமிழர்களும் முஸ்லிம்களும் இப் பிரதேசத்தில் சொந்த சகோதரர்களாக வாழ்ந்து வருகிறார்கள் அவர்களுக்கிடையில் பாரிய பிரச்சினைகள் இல்லை என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். இந் நிலையில் இக்குழுவினர் முஸ்லிம் சமூக பிரமுகர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் இன்று சந்தித்தனர்.

### பெரும்பாலும்...

பாளர் கௌசல்யன், நிர்வாகப் பொறுப்பாளர் பிரபா உட்பட தளபதிகள் பலரும் வரவேற்றனர்.

இடைக்கால நகல் தமது தலைவரின் பரிசீலனையின் பின் நோர்வே அரசாங்கத்தின் ஊடாக கையளிக்கப்படும். அதை அரசாங்கம் நிராகரித்தால் சர்வதேச நாடுகளின் கடும் எதிர்ப்பை சிறிலங்கா அரசாங்கம் சந்திக்க நேரிடும் என கேணல் கருணா ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் எப்போது பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் என அவரிடம் கேட்டபோது, இடைக்கால நகலை கையளித்த பின்னர் அரசாங்கம் அழைக்கும் போது பேச்சுவார்த்தைக்கு செல்வதற்குத் தயாராகவே இருக்கிறோம். எனவே இடைக்கால நிர்வாக நகலை ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தையைத் தொடர்வதா? இல்லையா? என தீர்மானிக்கும் பொறுப்பு அரசாங்கத்தின் கைகளில்தான் இருக்கிறது. எதையும் தாமதப்படுத்தும் நோக்கம் எமக்கு இல்லை என கேணல் கருணா மேலும் கூறினார்.

பேச்சுவார்த்தைகளின்போது முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாக கலந்துகொள்வது குறித்துக் கேட்டபோது, இடைக்கால நிர்வாக நகல் தொடர்பான பேச்சுவார்த்தை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில்தான் நடைபெறும்.

நாங்கள் தயாரித்திருக்கும் இடைக்கால நகலில் முஸ்லிம்கள் எதிர்பார்ப்பதை விட அதிக நன்மைகள் அவர்களுக்குக் கிடைக்கும். எனவே முஸ்லிம்கள் எந்த விதத்திலும் அச்சம் கொள்ளத்தேவையில்லை என அவர் தெரிவித்தார். (32)

### அரசியல்...

பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் உள்ளிட்ட துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் எனப் பெருமளவானோர் வரவேற்றனர். (லோ)


## பதவி வெற்றிடம்

### ஒப்புநோக்குநர்கள்

ஈழநாதம் நாளேட்டில் ஒப்புநோக்குநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். மாதாந்த வேதனம் 4000 ரூபா வழங்கப்படும். எதிர் வரும் 26-10-2003 அன்று காலை 10.00 மணிக்கு ஜெயந்தி நகரில் உள்ள ஈழநாதம் பணிமனைக்கு நேரில் வருமாறு கோரப்படுகின்றனர்.

நிர்வாகம்


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.